வாக்குமூலம்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
சி.சி.எண்.324/16
வழக்கு சாட்சி – அ.சா.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஈஸ்வரி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | தவமணி | தொழில் | ஸ்டாப்நர்ஸ் |
| கிராமம் | உத்தமபாளையம் | சமயம் | |
| தாலுக்கா | உத்தமபாளையம் | வயது | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.24

**( 1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. 1,2 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

அசா1 மணிகண்டன் எனக்கு தம்பி. அசா2 தனலட்சுமி எனது தங்கை. எதிரிகளை தெரியும். எதிரிகள் மாரநாதா சபை சர்ச்சில் போதகர்களாக இருந்தார்கள். ஆவோஸ் என்ற நபர் எங்களுக்கு குடும்ப நண்பர் அவர் மூலமாக எதிரிகளை எங்களுக்கு தெரியும். எங்களது வீட்டிற்கு எதிரிகள் ஒருநாள் ஜபம் செய்வதற்காக வந்திருந்தார்கள். அப்போது எங்களின் கஷ்டங்கள் அனைத்தையும் கேட்டார்கள். எதிரிகள் ஆண்டிபட்டியில் உள்ள எங்கள்சர்ச்சிற்கு வாருங்கள் என்றும் உங்கள் கஷ்டங்கள் அனைத்தும் தீர்ந்துவிடும் என்றும் கூறினார்கள். எதிரி விக்டர் எங்களிடம் என் தங்கை தனலட்சுமிக்கு தனக்கு தெரிந்த பிலிப்ஸ்கென்றி என்ற நபர் சென்னையில் இருப்பதாகவும், அவரிடம் கூறி வேலை வாங்கி தருவதாகவும் கூறினார். எதிரிகள் நாங்கள் பலநபர்களுக்கு வேலை வாங்கி கொடுத்துள்ளோம் என்றும் எங்களை நம்புங்கள் என்று கூறினார்கள். எதிரிகள் வேலை சம்மந்தமாக பேசிவிட்டு எங்களுக்கு தகவல் கொடுப்பதாக கூறியிருந்தார்கள். அதன்படி எங்களை தொடர்பு கொண்டு எனது தங்கை தனலட்சுமிக்கு இபியில் உதவி கணக்கீட்டாளராக வேலை தயாராக உள்ளது என்றும், அதற்கு ரூ.3,50,000/– பணம் கொடுக்கவேண்டும் என்றும் அப்படி கொடுத்தால் வேலைக்கான உத்தரவு தயார் செய்து கொடுத்துவிடுவதாக கூறினார்கள். மேற்படி தொகையை தயார் செய்து 26.3.12 தனலட்சுமியின் கணவர்

முருகன் எதிரிகளின் வீட்டிற்கு சென்று எதிரி விக்டரிடம் கொடுத்தார். எனது தம்பி மணிகண்டனுக்கு 10.11.13 தேதியில் இபியில் இருந்து உதவி பொறியாளருக்கான பணிக்கு 21.11.13 அன்று நேர்முகதேர்வு நடப்பதாக கடிதம் வந்திருந்தது. எதிரிகளுக்கு ஏற்கனவே கூறியிருந்த படி அவர்களிடம் சென்று எனது தம்பியின் நேர்முகத்தேர்வு பற்றி தெரிவித்தோம். அதற்கு எதிரிகள் என் தம்பிக்கு உதவி பொறியாளர் வேலை தயார் நிலையில் இருப்பதாகவும், பலநபர்களுக்கு வேலை வாங்கி கொடுத்திருப்பதாகவும், ஏமாற்றமாட்டோம் என்றும், இந்த வேலைக்கு ரூ11,00,000/– ஆகும் என்றும் கொடுத்தால் உடனே வேலைக்கான உத்தரவில் கையெழுத்து வாங்கி கொடுத்துவிடுவதாக கூறினார். நாங்கள் நம்பிக்கையின் பேரில் எங்களது அப்பா நிலத்தை விற்று வைத்திருந்த ரூ4,00,000/–த்தை 15.11.13 அன்று எதிரிகளின் வீட்டில் வைத்து எதிரி அனிதாவிடம் கொடுத்தோம். 25.11.13 அன்று என்னுடைய கணவர் தவமணி ரூ3,00,000/– எதிரிகளின் வீட்டில் வைத்து எதிரி அனிதாவிடம் கொடுத்தார். பாக்கி தொகையை தயார் செய்து மொத்தம் ரூ.11,00,000/–த்தை எதிரிகளிடம் கொடுத்தோம். 2 மாதங்கள் கழித்து மேற்படி வேலைக்கான முடிவுகள் வந்துவிட்டது. என் தம்பிக்கு வேலை கிடைக்கவில்லை. அதனால் எதிரிகளிடம் நாங்கள் கொடுத்த பணத்தை திருப்பி கொடுக்குமாறு கேட்டோம். 27.5.2014 அன்று எனது தங்கை தனலட்சுமி பெயரில் ரூ8,00,000/–த்திற்கு ஒரு காசோலை கொடுத்தார். மேற்படி காசோலையை வங்கிக்கு எடுத்து சென்றபோது பணம் இல்லை என்று திருப்பப்பட்டுவிட்டது. மீண்டும் எதிரிகளிடம் சென்று காசோலையை திருப்பபட்ட செய்தியை சொல்லி பணம் கேட்டோம். 30.5.14 அன்று என் பெயரில் ரூ6,50,000/–த்திற்கு ஒரு காசோலை கொடுத்தார். மேற்படி காசோலையை வங்கிக்கு எடுத்து சென்றபோது பணம் இல்லை என்று திருப்பப்பட்டுவிட்டது. மீண்டும் எதிரிகளிடம் சென்று காசோலையை திருப்பபட்ட செய்தியை சொல்லி பணம் கேட்டோம். 10.6.14 அன்று மீண்டும் ஒரு காசோலையை ரூ14,50,000/–த்திற்கு கொடுத்தார். மேற்படி காசோலையை வங்கிக்கு எடுத்து சென்றபோது பணம் இல்லை என்று திருப்பப்பட்டுவிட்டது. மீண்டும் எதிரிகளிடம் சென்று காசோலையை திருப்பபட்ட செய்தியை சொல்லி பணம் கேட்டோம். மீண்டும் எதிரிகளிடம் சென்று ரொக்கமாக பணத்தை எங்களிடம் கொடுக்குமாறு கேட்டோம். எதிரிகள் பணம் கேட்டு வீட்டிற்கு வந்தால் காலி செய்துவிடுவதாக மிரட்டினார்கள். 1.5.14 அன்று 50 ரூபாய்

பத்திரத்தில் ரூ14,50,000/- எங்களிடம் பெற்றுள்ளதாகவும், பணத்தை திருப்பி கொடுத்துவிடுவதாகவும் எழுதிக்கொடுத்தார். மீண்டும் 2 மாதங்கள் கழித்து எதிரகளின் வீட்டில் சென்று பணம் பற்றி நானும், எனது தம்பிமணிகண்டன், தங்கை தனலட்சுமி கேட்டபோது அடிக்கடி வந்து பணத்தை கேட்டால் நீங்கள் யாரும் உயிருடன் இருக்க மாட்டீர்கள் என்றும், ஆளை வைத்து கொலைசெய்து விடுவதாக கூறி மிரட்டினார். அதனால் பயந்துகொண்டு நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். அதற்கு பிறகு தேனி எஸ்பி ஆபிசில் புகார் கொடுத்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள 3 வது கையெழுத்து என்னுடையது தான். புகார் ஏற்கனவே அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை** செய்யபடவில்லை.